பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

17 08 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இஸ்ரேல் இடையேயான நட்புறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்து வருவது உற்பத்திக்கான இந்தியா இயக்கத்திற்கு கிடைத்த வெற்றி என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அஇஅதிமுக முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தான்யா ஹேமந்த் பட்டம் வென்றார்.

<<<<>>>>

இந்தியா - இஸ்ரேல் இடையேயான நட்புறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அமைதி, வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இரு நாடுகளும் தொடர்ந்து பணியாற்றும் என்று பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா - தென்கொரியா நாடுகளிடையேயான 10 ஆண்டுகால நட்புறவைக் குறிக்கும் வகையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், இருநாடுகளும் பரஸ்பரம் நலன் பயக்கும் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத செயல்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்துக்கொள்வதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Cho Hyun தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு தென்கொரியா முழு ஆதரவு அளிக்கும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்து வருவது உற்பத்திக்கான இந்தியா இயக்கத்திற்கு கிடைத்த வெற்றி என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் முதல் காலாண்டில் மின்னணு சாதனங்களின் ஏற்றுமதி 47 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் மின்னணு பொருட்களின் உற்பத்தி 31 பில்லியன் டாலரிலிருந்து 133 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உற்பத்தித் துறையில் இந்தியாவை சுயசார்பு நாடாக உருவெடுக்கச் செய்யும் வகையில் பல்வேறு முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியா மொபைல் போன் உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்னணுவியல் துறை அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்றும், சூரிய சக்தி தொகுதிகள், நெட்வொர்க்கிங் சாதனங்கள், சார்ஜர் அடாப்டர்கள் மற்றும் மின்னணு உதிரி பாகங்கள் ஆகியவை ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிப்பதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிஜெபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் குடியரசுத்துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்து இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய இம்மாதம் 21- ம் தேதி கடைசி நாளாகும்.

போட்டி இருக்கும் நிலையில், அடுத்த மாதம் 9 ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

<<<<>>>>

தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், தேர்தல்களுக்கு அடிப்படை ஆதாரமாக உள்ள வாக்காளர் பட்டியலை சுதந்திரமாகவும்,

நேர்மையாகவும் தயாரிக்க வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமை என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களில் தேர்தல் நடைமுறைகள் தொடங்குவதற்கு முன்னதாக வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் நடத்தப்பட வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அஇஅதிமுக முன்னுரிமை அளித்து வருவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைநாட்கள் மற்றும் ஊதியத்தை அதிகரிப்பதாக திமுக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறினார்.

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தி சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அஇஅதிமுக ஆட்சியில் வழங்கப்பட்ட 7 புள்ளி 5 சதவீத உள்ஒதுக்கீடு காரணமாக 2 ஆயிரத்து 818 மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் விவசாயிகளுக்கு காங்கிரீட் வீடு கட்டித் தரப்படும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி உறுதியளித்தார்.

<<<<>>>>

வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களை ஒட்டிய மலைப் பகுதிகளின் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழகம் மற்றும் தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக் கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகையில் பழங்குடியின மக்களின் கலாச்சார உடை, கைவினைப் பொருட்கள் மற்றும் அரிய புகைப்படங்கள் இடம்பெற்ற சிறப்புக் கண்காட்சி நடைபெற்றது.

எமது செய்தியாளரிடம் பேசிய ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, பழங்குடியின மக்களின் வருவாயை அதிகரிக்கும் இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

------------

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் திரு. டேவிட் லாமி, சர்வதேச விவகாரங்கள் குறித்து மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

------------

சர்வதேச விண்வெளி நிலையத்த்திற்குச் சென்ற முதல் இந்தியர் என்ற வரலாறு படைத்து தயாகம் திரும்பிய சுபான்ஷு சுக்லாவுக்கு தில்லி விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

------------

நாகாலாந்து மாநில ஆளுநராக திரு. அஜய்குமார் பல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

------------

ராணுவத்தின் தெற்கு படைப் பிரிவு தளபதி லெப்டினென்ட் ஜெனரல் தீரஜ் சேத் மக்கள் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாசநாதனை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

------------

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆடிக் கிருத்திகை தெப்பத் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் நபார்டு வங்கி சார்பில் வேளாண் மேம்பாட்டு நிதியின் கீழ் உருவாக்க்பபட்டுள்ள மீமிசல் கடற்பாசி மையத்தை ஆட்சியர் திருமதி அருணா ஆய்வு செய்தார்.

------------

விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய-மாநில அரசுகள் வழங்கும் நலத்திட்டங்களை திருநங்கைகள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

------------

காஞ்சிபுரம் மாவட்டம் குமரக்கோட்டம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆடிக் கிருத்திகையை ஒட்டி ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

------------

தூத்துக்குடியில் 6வது புத்தக திருவிழா வரும் 22ஆம் தேதி தொடங்குகிறது.

------------

Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தான்யா ஹேமந்த் பட்டம் வென்றார்.

Northern Mariana-வில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 15-10, 15-8 என்ற செட் கணக்கில் ஜப்பானின் கனே சகாயை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

----------------

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் ஜம்ஷெட்புர் அணி இன்று டைமன் ஹார்பர் அணியை எதிர்கொள்கிறது.

ஜம்ஷெட்புரில் இப்போட்டி மாலை 4 மணிக்கு தொடங்குகிறது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் மோகன் பாகன் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>